# வேத நூல்

சுவாமி கெங்காதரானந்தஜீ

# வேத நூல்

சுவாமி கெங்காதரானந்தஜீ

வெளியீடு :

சிவயோக சமாஜம்
பெருந்தெரு,
திருகோணமலை.

முதற்பதிப்பு : டிசம்பர் 1990

விலை : ரூ. 9/-

Printed by :

**The Kumaran Press,**
201, Dam Street,
Colombo-12.
Telephone : 421388

Kumarasamy Somasundaram
President
Colombo Tamil Sangam,
...ane, Colombo - 06.
Telephone No:- 2363759

# முன்னுரை

''வேதநெறி தளைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க பூதபரம்பரை பொலிய'' என்று பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான் கூறியதிலிருந்து எமது சமய பண்பாட்டு ஊற்றுக்கள் ஒருவாறு தெளிவாகின்றன. யமுனா, கங்கா, சரஸ்வதி ஆகிய மூன்று ஆற்றின்ப வெள்ளங்கள் திருவேணி சங்கமமாகக் கலந்தது போல எமது பண்பாட்டில் வேத பரம்பரை, சைவத்துறைப் பரம்பரை. பூத பரம்பரை ஆகிய முப்பெரும்பரம்பரைகள் சங்கமிக்கின்றன. தேவாரம் வேதசாரம் என்பர். சித்தாந்த சாத்திரங்கள் திருமுறைச் சாரமென்பர்.

''திருமுறைத் தெளிவே சிவஞான போதம்'' வை. இரத்தினசபாபதி - என்ற நூலினை சென்னைப்பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது.

மணிவாசகப் பெருமான் சிவ புராணத்தில் வேதங்கள் ஐயா என ஓங்கி'' என்பதாலும் ''ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க'' என்பதாலும் வேதங்கள் ஆகமங்கள் ஆகியவற்றின் வாயிலாக இறைவன் எமக்குத் திருவருள் புரிந்து ஆட்கொள்ளும் தன்மை புலப்படுகின்றது. திருவருளானது ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பது எவ்வாறெனில் ''ஒரு தூர திருஸ்டிக் கண்ணாடியானது தூரத்திலுள்ள பொருட்களை அண்மைப் படுத்தி அவைகள் உண்மையான தன்மையைக் காட்டுவது போல, ஆகமம் அறிதற்கரிய பொரு

ளின் உண்மையான தன்மையைக் காட்டும். (இது புலோலி சைவப் பெரியார் த. சிவபாதசுந்தரம் B. A அவர்களது விளக்கம் - திருவாசக மணிகள் நாலாம் பதிப்பு 1954)

இந்துப் பாரம்பரியத்தின் சமய பண்பாட்டு மூலங்கள் பற்றி சிறு குறிப்புகள் தந்து இரத்தினச் சுருக்கமாக இந்நூல் வழங்குகின்றது. இலங்கையில் திருகோணமலையில் சிவயோக சமாசத்தில் இருந்து ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் அருஞ் சேவையாற்றும் சுவாமி கெங்காதரானந்தஜி அவர்கள் இவ்வாறு எமக்கு அருளியது எமது தவப்பயனேயாகும். இதனைப் படிப்பவர்கள் கல்வி கரையில, கற்பவை நாள் சில மெல்ல நினைக்கின் பிணிபல என்பதனை அறிந்துகொண்டு அமைவுடைய கற்பவே என்பதனை உணர்ந்து தமக்கு அமைந்தவற்றை ஆழ்ந்து அகன்று நுண்ணியதாகக் கற்க இச்சிறு நூல் உதவும் என்பது துணிபு.

ஞான மண்டலம் '' ஞானச்சுடர்'' வஜனாமிர்தம் ஆகிய நூல்களைப் பெற்றுப் படித்துப் பயன் பெறும் அன்பர்கள் வேத நூல்கள் என்னும் இதனையும் பெற்றுப் பயனடைந்து மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பெற வாழ்த்துகின்றோம்.

வே. ந. சிவராசா
சிவயோக சமாசம்
அன்பர்

G. U, 1 - 3
குணசிங்கபுரம்
கொழும்பு - 12.
15. 11. 1990

# ஞான நூல்கள்

ஆதிகாலத்தில் வேதவித்தைகளை குரு முகமாகக் கேட்டுத் தெளிந்து அப்பியாசம் பண்ணிக் கொண்டிருந்தபடியால் வேதத்திற்கு ''அனுலேக்கிய சரஸ்வதி'' (எழுதப்படாத வித்தை)என்றொரு மறுபெயரும் இருக்கிறது. நாலாயிரம் வருடங்களுக்கு முன் வேதவியாச இருஷியால் வேதம் இருக்கு, யசுர், ஸாம, அதர்வ என்று நான்காக வகுத்து எழுதப்பட்டது. இது வியாச இருஷியின் சீடர்களான ஸூமந்து, பைவர்,ஜமினி வைசம்பாயனர் என்னும் நால்வரால் உபதேசிக்கப்பட்டு வந்தது.

## இருக்கு வேதம்

1038 சூக்தங்களை கொண்டது. இதில் அக்னி, வாயு, சூரியன், இந்திரன், வருணன், ருத்திரன், விஷ்ணு, சரஸ்வதி முதலிய தேவர்களைப்பற்றிய வர்ணனைகளும் அவர்களை உபாசனை செய்யும் முறைகளும் இருக்கிறது. ருக் என்றால் ''ஸ்துதி'' என்று அர்த்தம். உலகில் முதல் முறையாக நூல் வடிவில் எழுதப்பட்டது இருக்கு வேதம் என்று சொல்லுவார்கள். இதில்

கொழும்பு தமிழ்ச் சங்கம்



நூலகம்

சாகஸம், வாஸ்கலம், ஆசுவலாயனம் முதலிய 21 சாகைகள் உள்ளன. ஒரு பிரிவு ஒரு சாகையென்று சொல்லப்படும். இதில் சாகல சாகை மாத்திரம் தான் இப்பொழுது கிடைக்கக் கூடியதாய் இருக்கிறது. இருக்கு வேதத்தின் உபவேதம் ஆயுர்வேதம். ஆயுர்வேதசாஸ்திரத்தை பிரமன் பிரஜாபதிக்கும் ப்ரஜாபதி அசுவினி குமாரர்களுக்கும் கற்றுக் கொடுத்தார். அசுவினி குமாரர்களிடமிருந்து தேவேந்திரனும் அவரிடமிருந்து தன்வந்திரியும் தன்வந்திரியிடமிருந்து சுதர்ச முனியும் கற்றனர். சுதர்ச முனி ஆயுர்வேத சாஸ்திரத்தை விரிவான சாஸ்திரமாக எழுதி வைத்தார்.

## யஜுர் வேதம்

இது கிருஷ்ண யஜுர் வேதமென்றும், சுக்கில யஜுர் வேதமென்றும் இரு பகுதிகளைக் கொண்டது. அசுவமேதம், இராஜசூயம் போன்ற மஹா யக்ஞ விதிகள் விவரிக்கப்பட்டிருக்கிறது. இதன் உபவேதம் தனுர்வேதம்.

## தனுர் வேதம்

நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் தேவையான பாதுகாப்பு முறைகள் இதில் இருக்கின்றது. தேசப்பாதுகாப்புக்குத் தேவையான ஆயுத நிர்மாண முறைகள், அஸ்திர வித்தை, சாஸ்திர வித்தைகள் அவற்றை உபயோகிக்கும் கிரமங்களும் அனேகவித யுத்த முறைகளும் விஞ்ஞான ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் விபரிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பரமாணுத்தத்துவம் யுத்த கருவிகளின் தேவை; சஸ்திர மந்திரங்கள், தேசப் பாதுகாப்பு முறைகள், ஆயுதப் பாதுகாப்பு முறைகள் விரோதிகள் தோன்றுவதற்குரிய காரணங்கள் முதலிய அரிய விஷயங்கள் சாஸ்திர ரீதியாக விளக்கப்பட்டிருக்கிறது. தனு வேதம் கிருத யுகாரம்பத்தில் பரமேஸ்வரனால் வழங்கப் பட்டது.



## ஸாம வேதம்

இது பூர்வாச்சிக மென்றும், உத்தராற்சிக மென்றும் இரண்டு பகுதிகளையுடையது. இதில் பரமேஸ்வரன், விஷ்ணு, விராட் புருஷன்போன்ற மகாநாமங்களுடைய மகிமையும் சக்திகளும் விபரிக்கப்பட்டிருக்கிறது. சங்கீதக் கலையின் மூலத் தத்துவங்கள் சாஸ்திர ரீதியாக விளக்கப்பட்டிருக்கிறது. இதன் உபவேதம் காந்தர்வ வேதம். விஷயாதிகளில் ஓடித்திரியும் மனதை சங்கீதம் சங்கீதக் கருவிகள் மூலமாகவும் ஒருமுகப்படுத்தி ஈஸ்வர தியானத்தில் லயப்படுத்தி விடுவதுதான் காந்தர்வ வேதத்தின் முக்கிய நோக்கம். மோட்சத்திற்குரிய பலவிதமான யோக முறைகளில் சங்கீதமும் ஒரு உபாயமென்று வேதம் கூறுகிறது. சங்கீதம், நாட்டியம், வாத்தியம், தாளம் முதலியவை சாஸ்திர ரீதியாக விளக்கப்பட்டிருக்கிற வேதம் காந்தர்வ வேதம்.

## அதர்வ வேதம்

இதில் எல்லா விதமான உபாசனை விதிகளும் பூத, பிசாசு உபத்திரவங்கள், இயற்கைக் கோளாறுகளால் வரும் ஆபத்துக்குரிய பரிகாரங்கள், துஷ்டர்களும் விரோதிகளும் இல்லாமற் பண்ணும் மரண மாரண பிரயோகங்கள், தேசத்தில் தோன்றும் புரட்சித்தத்துவங்கள் போன்ற விஷயங்கள் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றன. இந்த விஷயங்கள் சங்கிதம், பௌஷ்டிகம், ஆபிசாரீகம் என்னும் மூன்று பிரிவுகள் மூலமாக விபரிக்கப்பட்டிருக்கிறது. மந்திர ஜெபத்தால் காரிய லாபத்தையடைதல், உயிர்ப் பாதுகாப்பு, விரோதிகளை அகற்றுதல் முதலிய வித்தைகளும் கூறப்பட்டிருக்கிறது. கைவல்லியம், தியான பிந்து, அமிர்த பிந்து, நாதபிந்து, ப்ரச்சனம், முண்டகம் மாண்டூக்கியம் போன்ற முக்கியமான உபநிஷதங்கள் அதர்வ வேதத்தில் ஞானகாண்டப் பகுதிகளாகும். இதன் உபவேதங்கள் சில்ப்பவேதம் அர்த்தோப வேதம். உபவேதங்களில் பொருளாதார சாஸ்திரம், வாழ்க்கை நெறிகள், சமுதாய ஒற்றுமை, இராஜ நீதி போன்ற விக்ஷயங்கள் இடம்பெறுகின்றது. இங்ஙனம் சர்வசராசரங்களில் மூலத்துவங்களும், ஆத்மீகத்திற்கும் லௌகீகத்திற்கும் தேவையான சகல விஷயங்களும் ஞான விஞ்ஞான ரீதியாக வேதங்களில் அடங்கப்பெற்றிருக்கிறது. வேதங்களில் இல்லாத ஒன்றுமே இல்லை.



# உபநிஷதங்கள்

### தசோபநிஷத்துகள்

(1) ஈசாவாசியோபநிஷதம்

இதில் 13 மந்திரங்கள் இருக்கின்றது. இறைவனுடைய சர்வவியாபகத்தும், வித்தியா, சுவித்தியா, ஆத்மானுபூதி, அனுபூதியின்மை போன்ற விஷயங்கள் விபரிக்கப்பட்டிருக்கிறது.

(2) கேனோபநிஷதம்

34 மந்திர சுலோகங்கள் மனம்,பிராணன், வாக்கு இவைகளின் தோற்றம் இயக்கம் முதலியவைகளைப்பற்றிக் கேள்வியும் பதிலும் மூலமாக விளக்கப்பட்டிருக்கிறது. உலகத் தோற்றத்திற்கும் இயக்கத்திற்கும் காரணமாயிருப்பது இறைவன்தான் என்ற தத்துவத்தை தக்க பிரமாணங்களுடன் சிறந்த முறையில் கூறியிருக்கிறது.

(3) கடோபநிஷதம்

இன்றைய உலகில் பிரசித்தி பெற்ற உபநிஷதம். இதில் யமன் நசிகேதனுக்கு இறப்பு,பிறப்பு, ஆத்மா, ஜீவன் இவைகளைப்பற்றித் தெளிவாக உபதேசிக்கப்படுவதுதான் முக்கிய விஷயம். மற்றும் பஞ்சாக்கினி வித்தையும் அக்கினி உபாசனையும் அதன் பலன்களைப்பற்றியும் சொல்லியிருக்கிறது.

(4) ப்ரச்சனோபநிஷதம்

பரத்துவாஜன், சத்தியகாமன், கார்க்கியன், ஆசிவாலாயனன், பார்க்கவன், கார்த்தியாயனன் என்ற 6 இருஷ்ஷிகளுக்கு பிப்பலாதமகர்ஷி ப்ரம்ம வித்தையை உபதேசித்த விஷயங்கள் இதில் அடங்கியிருக்கிறது.

(5) முண்டகோபநிஷதம்

ப்ரம்மன் தனது மகன் அதர்வனுக்கு ப்ரம்ம வித்தையை உபதேசித்ததுதான் இதன் முக்கிய விஷயம். ஜீவ தத்துவம், ஆத்ம தத்துவம், ப்ர ணவ உபாசனையால் ப்ரம்மத்தை அறிதல் போன்ற அபூர்வமான விஷயங்கள் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

(6) மாண்டுக்கியோப நிஷதம்

ஜாக்கிரம், சுஷுப்தி, சொப்பனம், துரியம். என்ற நான்கு அவஸ்தைகளைப்பற்றியும் ப்ரணவ தத்துவங்களும் கூறப்பட்டிருக்கிறது.

(7) தைத்திரியோப நிஷதம்

இதில் ஆத்மா, புருஷன் முதலியவையைப் பற்றி விளக்கியிருப்பதுடன் ஆத்ம வித்தையை அப்பியாசிக்கும் சாதகர்களுக்குத் தேவையான உபதேசங்களும் உண்டு.

(8) ஆயிதரேயோப நிஷதம்

ஆத்ம சக்தியின வியாபக நிலை, ஆத்ம சைதன்யத்தால் இந்திரியங்கள் தொழில் புரியும் விதங்கள் போன்ற விஷயங்களைக் கொண்டது.



(9) சாந்தோக்கியோஉபநிஷதம்

இதில் ப்ரணவ உபாசனை, ப்ரம்ம உபா சனை முதலிய உன்னதமான உபாசனா முறை களும் முக்கியமான வேத வித்தைகளின் அனேக பகுதிகளும் அடங்கியுள்ளது.

(10) ப்ரகதாரண்யகோப நிஷதம்

மது வித்தை போன்ற அனேக ஆத்மவித்தை களும் காயத்ரி, பிராணமகிமை, ஞானியின் மகிமை முதலிய விடயங்கள் அடங்கியிருக்கிறது.

## ஸ்மிருதிகள்

(1) மனுஸ்மிருதி

இதில் தோற்றம், நிலை, ஒடுக்கம், வரு ணாச்சிரம தரும்ம் பஞ்சயக்ஞம், ம்ருத்துவி ஞானம், பிராயச்சித்தம், இராஜநீதி,சில்ப்ப வித் தைகள், சபாநியமம், நீதி நியாயம், விருஷ விஞ் ஞானம் (மரம் செடி கொடிகளைப் பற்றியது) இல்லற தருமம், மக்கள் பேறு பற்றிய நியமங்க ளைக் கற்பிக்கும் முறையும், கற்கும் முறையும் தொழில் நியமங்கள், வாழ்க்ன்கயின் குறிக்கோள் முதலியவிஷயங்கள் உள்ளன.

(2) யாக்ஞ வல்க்கியஸ்மிருதி

இந்த ஸ்மிருதியில் விவாஹம், பிராயச் சித் தம் இவைகளைப் பற்றிய விஷயங்கள் இருக் கின்றன.

## அஷ்டாதச ஸ்மிருதிகள்

(1) விஷ்ணுஸ்மிருதி

இதில் வருணாச்சிரம தருமம், பண்பாடு, ஒழுக்கம் முதலியவை பற்றி உள்ளன.

(2) அஸ்திரஸ்மிருதி

வாழும் வழிகள், அதற்கேற்ற பல தொழில் முறைகள், பிராயச்சித்த விதிகள்.

(3) ஹாரிதஸ் மிருதி

இதில் யோக சாஸ்திரங்கள் அதிகமாக இடம் பெறுகின்றன.

(4) ஆங்கிரஸ்மிருதி

வர்ணாச்சிரம தர்மங்கள்.

(5) யமஸ்மிருதிகள்

பஞ்சமா பாதகங்களைப் பற்றியும் அவைக்குரிய ப்ராயச்சித்த விதிகளும்.

(6) ஆபஸ்தம்பஸ் மிருதி

பசு பரிபாலனம், நீர்ப்பரிசோதனை, நீர் சுத்திகரணம் போன்ற விஷயங்கள்.

(7) தேவலஸ்மிருதி

சுத்தம், அசுத்தம் போன்ற காரியங்கள்.

(8) ஸம்வர்த்தஸ்மிருதி

ஞான விஞ்ஞான விஷயங்கள்.



(9) சாத்தியானஸ்மிருதி

யக்ஞோபவீதம் (உபநயனம்) யக்ஞம், ஒழுக்க விதிகள், கோரக்ஷணம்.

(10) ப்ரஹஸ்பதிஸ்மிருதி

தானம், சிரார்த்தம், பிராமண பெருமை.

(11) பராசரஸ்மிருதி

யுக தருமம், விஷ விஞ்ஞானம்.

(12) வியாசஸ்மிருதி

ஷோடச சம்ஸ்காராதிகருமங்கள், பிறந்ததிலிருந்து இறக்கும் வரையிலும் அனுசரிக்க வேண்டிய விசேஷ கருமானுஷ்டானங்கள்.

(13) சம்கஸ்மிருதி

ஜெப விதிகள், தர்ப்பணம், ஆசார அனுட்டான முறைகள்.

(14) லிகிதஸ்மிருதி

ஆசாரிய லட்சணங்கள்.

(15) கௌதமஸ்மிருதி

நியாய நியமங்கள், பெண்கள் தருமங்கள்.

(16) தக்ஷிஸ்மிருதி

யோக ஞான விஷயங்கள்.

(17) சாதா தபஸ்மிருதி

மறு பிறப்பு, நோய்கள், நோய்களுக்குரிய பரிகார முறைகள்.

(18) வஸிஸ்ரஸ்மிருதி

சுவாத்தியாயம் (படனம்) கர்மம், பொருட்கள் ஏற்றுக்கொள்ளும் விதிகள்.

# புராணங்கள் 18

## 1. பிரம்ம புராணம்

இதன் அதிக பாகம் பிரம்ம மகிமையைப் பற்றிக் கூறுகிறது. மற்றும் சிவலீலை இராமா யணக் கதை, ஸ்ரீ கிருஷ்ண சரிதம், அவதாரக் கதைகள், தலயாத்திரையின் பெருமை முதலிய விஷயங்கள்.

## 2. பத்ம புராணம்

இதில் பிரபஞ்ச உற்பத்தியைப் பற்றி விஸ் தாரமாக விளக்கியிருக்கிறது. கபில கீதை கர்ம கீதை, காசி மகாத்மியம், கேதார கல்பம், கண பதி சகஸ்ர நாமம் போன்ற முக்கியமான விஷ யங்களுமுண்டு.

## 3. விஷ்ணு புராணம்

மகா விஷ்ணுவின் மகிமைகளைப்பற்றி வர் ணிக்கிறது. விருதம் தர்ம கதைகள், இயம நிய மாதிகள் தர்ம சாத்திரம், பொருள் சாஸ்திரம், ஜோதிடம், அற்புதங்களைச் செய்யும் பலதர ரக சிய வித்தைகள்.

## 4. சிவ புராணம்

சிவ சரிதத்தை அடிப்படையாகக் கொண் டது. ருத்திர சம்ஹிதை, சதருத்திர சம்ஹிதை உமாசம்ஹிதை, கோடி ருத்திர சம்ஹிதை, வாய வீய சம்ஹிதை என்ற பகுதிகளைக் கொண் டது.



## 5. பாகவத புராணம்

பொதுவாக விஷ்ணு கதைகளையும் கிருஷ்ண சரிதத்தையும் கொண்டது. பக்தி, ஞானம், வைராக்கியம் போன்ற விஷயங்களைச் சிறந்த ரீதியில் விளக்கி இருக்கிறது.

## 6. நாரத புராணம்

இதில் கூறப்படும் விஷயங்கள் பின் வருவன. பராத்திவலிங்கம், மகாத்மியம், தத்தாதிரேய தோத்திரம், வியாத கதை, சங்கட கணபதி தோத் திரம்.

## 7. மார்க்கண்டேய புராணம்

விஷயங்கள் பஞ்ச தத்துவம், சதாசார விளக் கம், யோக விதிகள், ஓங்கார தத்துவ விளக்கம்.

## 8. அக்கினி புராணம்

ஹிந்து மதசாஸ்திரங்களின் சுருக்கம். இதில் காணலாம். முக்கிய விஷயங்கள் அஷ்டாதச வித் தைகள், இராமாயணம், பாரதம் முதலிய இதி காசச் சுருக்கம், தனுர் வேத வித்தைகள், பொருள் சாஸ்திரம், ஆயுர் வேதம், தர்சனங்கள் இலக்கியம் இலச்கணம்.

## 9. பவிஷிய புராணம்

விஷயங்கள் பலவிதமான அக்கினிகளைப் பற் றிய விளக்கம், இந்திய வழிபாட்டு முறைகள், ஆத்ம வித்தைகள்.

## 10. பிரம்மவை வர்த்தன புராணம்

விஷயங்கள்: பிரம்ம கண்டம், ப்ரகிருதி கண்டம், கணபதி கண்டம், ஏகாதசி மகாத்மியம், முக்திமகாத்மியம்.

## 11. லிங்க புராணம்

பொருளடக்கம்: அகோர மந்திர மகாத்மியம், பஞ்சகவ்விய தானம், மிருத்தியுஞ்சய மந்திரவிதானம், அருணாசல மகிமை, பஞ்சாட்சர மகிமை.

## 12. வராஹ புராணம்

மனிதன் தோன்றிய வரலாறு, சாகதிவு, குசதீவு, சால்மலிதிவு,முதலிய திவுகளைப் பற்றிய விளக்கங்களும் சர்துர்மாஸமகாத்மியம், வெங்கடகிரி மகாத்மியம், போன்றவை பற்றியும் சொல்லியிருக்கிறது.

## 13. ஸ்கந்த புராணம்

திருமுருக பெருமையையும் வரலாற்றையும் முக்கியமாகக் கொண்டது. பாரத நகட்டில் இருக்கும் முக்கியமான யாத்திராஸ் தலங்களின் மகிமை மலயாசல காண்டம், பைரவ கண்டம், காஸ்மீர கண்டம் கோசல கண்டம் முதலிய ஸ்தல புராணங்களும் மற்றும் அநேக க்ஷேத்திர மகிமைகளும் இடம் பெறுகின்றது.

## 14. வாமன புராணம்

இதில் வாமன சரிதத்துடன் சிவகல்ப்ப கதைகளும் கங்கா மகிமையும் சொல்லப் பட்டிருக்கிறது.



## 15. கூர்ம புராணம்

பொருளடக்கம்: கூர்மவதார கதை, ஸ்தல யாத்திரை விதிகள், ஈசுவர கீதை, யதி தருமம், கிரகஸ்த வானப்பிரஸ்த தர்மங்கள்.

## 16. மச்ச புராணம்

இது மற்றைய புராணங்களை விடப்பழமையானது. விஷய விளக்கம்: மச்சாவதாரக் கதைகள், தானதரும விதிகள்.

## 17. கருட புராணம்

பொருளடக்கம்: பஞ்சபூத விளக்கம், யமலோகம், யம வாதனை, நரகம் முதலியவைபற்றி விளக்கியிருப்பதுடன் ஸ்ரீரங்க மகிமையும் பஞ்சபூர்வ மகிமையும் கூறப்பட்டிருக்கிறது.

## 18. பிரம்மாண்ட புராணம்

பொருளடக்கம்: அனந்த சயனம், ஆனந்த நிலையம், தாரகப் ப்ரம்ம மந்திரம், தக்ஷிணா மூர்த்தி, லஷ்மி பூஜை, கணேச கவசம், ஹனுமத் கவசம், புகழ் பெற்ற ஸ்ரீ லரிதோபாக்கியானம். ப்ரம்ம புராணத்தின் ஒரு பகுதியாகும்.

## உப புராணங்கள்

சூரிய புராணம், கணேச புராணம், காளிகா புராணம், கல்க்கி புராணம், ஸனத்குமார புராணம், நிர்சிங்க புராணம், துர்வாச புராணம், வாசிஷ்ட புராணம், பார்க்கவ புராணம், கபில

புராணம், பராசர புராணம், சாம்ப புராணம், நந்திகேசுவர புராணம், ப்ரஹத் தரும புராணம் பரான புராணம், பசுபதி புராணம், மானவ புராணம், முக்கலன புராணம்.

## ஆகம தந்திர சாஸ்திரங்கள்

நிகாகமங்கள் என்பது இந்து தருமத்தின் முக்கியமான இரண்டு பகுதிகள். நிகமமென்றால் வேதம்- ஆகமமென்றால் தந்திரம். அதர்வவேத தத்துவங்கள் காலாகாலத்திற்கு ஏற்றவாறு வளர்ந்து வந்து பிற்காலத்தில் ஆகம சாஸ்திரங்களாக வடிவம் கொண்டது. சத்திய யுகத்தில் வேத நியமங்கள், த்ரோபதா யுகத்தில் ஸ்மிருதி வாக்கியம், துவாபர யுகத்தில் புராண தத்துவங்களை அனுசரித்தல், கலியுகத்தில் ஆகம விதிகளை அனுசரித்தும் வாழ வேண்டுமென்பது சாஸ்திர விதி.

தந்திர சாஸ்திரத்தில் மாரணம், மோகனம் உச்சாடனம், வசீகரணம், ஆபீசாரம் பலதரப்பட்ட கலா வித்தைகள் அடங்கியிருக்கிறது. இதைக் ''குப்த்த'' சாஸ்திரமென்றும் சொல்வார்கள். இன்னும் இதில் முக்கியமாக அடங்கியிருக்கும் விடயங்கள் பின்வருமாறு: ஆலய நிர்மாணம், பூஜா நித்திய நைமித்தியங்கள், விக்கிரக ப்ரதிஸ்டை, விக்கிரக லக்ஷணஸ்னானம், விபூதி தாரணம், பூத சுத்தி, பிரணாயாமம், சந்தியா வந்தனம், ஜெபம், தீக்ஷை, கும்பாபிஷேகர



மந்திர சோதனம், வசந்த பூஜை, ஸ்ரீ சக்கர பூஜை, தீக்ஷாகாலம், அந்தியேட்டி கிரியைகள், ஷடங்க நியாஸம், மஹா நியாஸம், பஞ்சாங்க நியாஸம், ஸம்மோஹன நியாஸம்.

## ஆகமங்கள் 28

இறைவனுடைய ஐந்து திருமுகங்களிலிருந்து 28 ஆகமங்கள் தோன்றின.

1. ஸத்யோஜாத முகத்தினின்று காமீகம் ஜோஜகம், சிந்தியம், காரணம் என்ற நான்கு ஆகமங்கள்.

2. வாமதேவ முகத்தினின்று தீப்தம், சூக்குமம் ஸஹஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம் என ஐந்துஆகமங்கள்.

3. அகோர மூகத்தினின்று விஜயம், புவம்,வீரம் என்ற மூன்று ஆகமங்கள்.

4 தற்புருஷ முகத்தினின்று ரவுரவம், மகுடம், விமலம், சந்திர ஞானம் பிம்பம் என்ற ஐந்து ஆகமங்கள்.

5. ஈசாதன முகத்தினின்று ப்ரோத்கீதம், லனிதம், ஸித்தம் ஸந்தானம், ஸர்வோக்தம், பரமேசுவரம்: கிரணம், வாதுளம் என்று 8 ஆகமங்கள் தோன்றின.

28 ஆகமங்களில் 10 சிவ பேதமென்றும் 18 ருத்திர பேதமென்றும் கூறப்படும். எல்லாவற்றையும் சரியா பாதம், கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம், என்று நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. சரியா பகுதியில் பூஜாரத்விய விளக்கமும் பூஜாவிதிகளும்.
2. கிரியா பகுதியில் ஆகர்ஷணம் முதல் ப்ரதிஷ்டா வரையில் இருக்கும் சகல கிரியா விசேஷங்களும் நித்திய நைமித்திய முறைகளும் உற்சவ காரியங்களும் விவரிக்கப்பட்டிருக்கிறது.
3. யோக பகுதியில் ஆத்ம சுத்தி, அந்தரயாகம் முதலியவைகள்.
4. ஞானபாதத்தில் பசு, பதி, பாச விளக்கத்துடன் ஆத்ம தரிசனம், சிவரூபம், சிவதர்சனம், சிவயோகம், சிவபோகம் முதலிய தத்துவ விளக்கங்களுமுண்டு.

## தர்சனங்கள்

1. சாங்கீய தர்சனம்
2. யோக தர்சனம்
3. வைசேஷீக தர்சனம்
4. நியாய தர்சனம்



5. மீமாம்ஸா தர்சனம்.
6. வேதாந்த தர்சனம்.

### 1. சாங்கிய தர்சனம்

கபில முனிவரால் எழுதப்பட்டது. புருஷனும் ப்ரகிருதியும் ஆதாரமாக வைத்து ஆராய்ந்து ஞானம் பெறுவது இதன் நோக்கம். புத்தமதம் சாங்கிய தர்சனத்தை ஆதாரமாக வைத்து உண்டாக்கப்பட்டது. மும்மலங்களினின்றும் விடுதலை அடைந்தால் (நிர்வாணநிலை) நித்தியமான சிவானுபூதி உண்டாகுமென்பது இதன் முடிவாகும். இதில் காரிய காரணபந்தங்களைத் தத்துவரீதியில் ப்ரதிவாதித்திருக்கின்றது. சாங்கிய தர்சனத்தில் பரிணாம வாதமென்றும் விவர்த்த வாதமென்றும் இரண்டு பகுதிகளுண்டு. இது மூலமாக ப்ரகிருதி ஆத்மா, சிருஷ்டி, முதலியவைபற்றி நன்றாக விசாரம் செய்யப்பட்டிருக்கிறது.

### 2. யோக தர்சனம்

பதஞ்சலி மகாரிஷியால் உண்டாக்கப்பட்டது. யோக தத்துவங்கள் சாஸ்திர ரீதியாக ஆராயப்பட்டிருக்கிறது. வழக்கத்தில் அறியப்படும் ஐந்து கர்மேந்திரியங்களுக்கும் ஐந்துஞானேந்திரியங்களுக்கும் அப்பால் அதி சூக்குமமான கர்மேந்திரியங்களும் ஞானேந்திரியங்களும் இருக்

கின்றதென்பது யோக மத சித்தாந்தம். இந்த சூக்குமேந்திரியங்களின் இயக்கத்தை விருத்திசெய் தால் பந்தத்திலிருந்து விடுதலையடைந்து ஆத்ம தரிசனம் பெறலாமென்பது இதன் கோட் பாடு. யோக தர்சனம், இயமம், நியமம், ஆஸ னம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை தியானம், சமாதியென்று 8 வித சாதன முறைக ளைக் கொண்டதாகையால் அது அஷ்டாங்க யோகமென்றும் சொல்லப்படும்.

### வைதேசிக தர்சனம்

சனாதன முனிவரால் எழுதப்பட்டது. அணுக் கள், பஞ்ச பூதம், பிரபஞ்ச சிருஷ்டி முதலியவற் றைப்பற்றி அதிநுணுக்கமாய் ஆராய்ந்த முடிவு களைக் கூறியிருக்கிறது. இதில் 24 குணங்களை யும் 9 திரவியங்களைப்பற்றியும் சாஸ்திர ரீதி யாக ஆராயப்பட்டிருக்கிறது.

### 9 திரவியங்கள்

1. பிருத்துவி
2. ஜலம்
3. அக்கினி
4. வாயு
5. ஆகாசம்
6. காலம்
7. திசை
8. ஆத்மா
9. மனம்



### 24 குணங்கள்

1. ரூபம் (ஒளி)
2. ரசம் (சுவை)
3. கந்தம் (நாற்றம்)
4. ஸ்பர்சம் (ஊறு)
5. சப்தம் (ஓசை)
6. சம்கிய
7. பரிமாணம்
8. வித்தியாசம் (பேதம்)
9. சம்யோகம்
10. விபாகம் (தூரம்)
11. பரத்துவம்
12. அபரத்துவம் (அண்மை)
13. புத்தி
14. சுகம்
15. துக்கம்
16. இச்சை
17. துவேஷம்
18. பிரயத்தினம் (முயற்சி)
19. குருத்துவம் (பாரம்)
20. திரவியத்துவம்
21. சினேகிதம்
22. ஸம்ஸ்காரம் (பண்படுதல்)
23. பாபம்
24. புண்ணியம்

4. நியாய தர்சனம்

கௌதமமுனிவரால் இயற்றப்பட்டது. இதில் பதார்த்தங்களைப்பற்றி விசாரணை செய்தறிந்து அவற்றின் அறிவு கொண்டும், ஒருமைப்பாடு தத்துவம் கொண்டும் ஆத்ம விடுதலை அடையலாம் என்று நிரூபிக்கின்றது. தருக்க சாஸ்திரம் யுக்தி வாதம் முதலிய சாஸ்திரங்களும் இதில் உண்டு.

தத்துவஞான பரமாய 16 விஷயங்களை விளக்கி அதன் மூலம் ஞானம் பெறலாமென்று நிரூபிக்கிறது. அவையாவன:

| | | | |
|---|---|---|---|
| 1. | பிரமாணம் | 9. | நிர்ணயம் |
| 2. | பிரமேயம் | 10. | வாதம் |
| 3. | சம்சயம் | 11. | ஜல்ப்பம் |
| 4. | பிரஜோனம் | 12. | விதண்டா |
| 5. | திருஷ்டாந்தம் | 13. | ஹேத்னவாபாசம் |
| 6. | சித்தாந்தம் | 14. | சலம் |
| 7. | அவயவம் | 15. | ஜாதி |
| 8. | தருக்கம் | 16. | நிக்கிரகஸ்தானம் |

மெஞ்ஞானம் அடைவதற்கு பிரத்தியஷம், அனுமானம், உபமானம், சப்தம் என்று நான்கு விதமான சாதனா விதிகள் இதில் உபதேசிக்கப் பட்டிருக்கிறது. மற்றும் தர்க்கம் யுக்தி முதலிய சாஸ்திரங்களுமுண்டு, முக்கியமாக பரமாணுக்க ளைப்பற்றியும் பரமாணுக்களால் பிரபஞ்சமும் பிரபஞ்சப் பொருட்களும் எவ்விதம் உண்டாவ தென்பதையும் தெளிவாக ஆராய்ந்து தக்க பிர மாணங்களுடன் விளக்கியிருக்கிறது.



5. மீமாம்ஸா தர்சனம்

இயற்றியவர் ஜைமினி மகரிஷி. இதில் வேத மந்திரங்களின் பொருள் அறியவேண்டிய வழி வகைகளைச் சொல்லியிருக்கின்றது. விசேஷமாக வேதத்திலே கர்ம காண்டத்தைப்பற்றி விளக்கி கர்மவினைகள் மனிதனை எவ்விதம் பாதிக்கும் என்பதையும் விளக்கியிருக்கின்றது.

வேதாந்த தர்சனம்

இயற்றியவர் பாதராயண மகரிஷி. ஆத்மா வின் சூக்கும நிலை, ஜீவாத்மா, பரமாத்மா ஐக் கிய பாவம் கர்ம வினைகளில் அகப்படாமல் வாழும் வழிகள் இறைவனுடைய மாயாசக்தி முதலிய அபூர்வ விஷயங்களைப்பற்றி எழுதியி ருக்கிறது.

ஷண் மதங்கள்

1. காணபத்தியம்
2. கௌமாரம்
3. சௌரம்
4. சாக்தம்
5. சைவம்
6. வைஷ்ணவம்

1. காணபத்தியம்

ஓங்கார சொரூபியான விநாயகப் பெருமானைவழிபடும் முறைகள் உருத்திர கணங்களின் தலைவனாயிருக்கும் விக்னேஸ்வரனை வழிபட்டால் சகலவிதமான தடைகளும் நீங்கி வாழ்க்கையில் எல்லா இன்பங்களையும் அனுபவிக்கலாம்.

2. கௌமாரம்

சுப்ரமணியன், கார்த்திகேயன், ஆறுமுகன், ஸ்ரீ குமாரன் என்றெல்லாம் அழைக்கப்படும்முருகப் பெருமானை முழுமுதற் கடவுளாகக் கருதி வழிபடும் விதிகளை உடையது.

3. சௌரம்

இது சூரியபகவானை இறைவனாகக் கருதி வழிபட்டு உபாசனை செய்யும் வழிவகைகளைக் கொண்டது. பகவான் கிருஷ்ணனுடைய மகன் சாம்பன் தன்னுடைய குருவின் உத்தரவுப்படி சாக தீவிலிருந்து சூரிய உபாசகராய "மக" (Maga) என்ற பிராமணர்களை பாரத நாட்டிற்கு கொண்டு வந்து குடியேற்றி அவர்கள் மூலமாகத்தான் பாரதத்தில் சூரிய வழிபாடு பரவியதென்று ஒரு ஐதீகமும் இருக்கின்றது.

4. சைவ மதம்

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் மதம். புராதன காலத்தில்



பாசுபதம், மஹா விருதம், சைவம், காபாலம், வாமம், பைரவம், ஐக்கிய வாதம் என்ற பிரிவுகளுடன் உலகம் முழுவதும் பரவியிருந்த சைவ மதத்தின் ஆசாரியார் பரமேசுவரன் என்றுதான் நம்பப்படுகிறது. சிவலிங்க வழிபாட்டுக்குப் பிறகுதான் ஏனைய விக்கிரக வழிபாட்டு முறைகள் வந்தன. சைவத்துவைத ஸ்தாபகரான ஸ்ரீ கண்டாசாரியாரும் அவருடைய சிஷ்யருமான அகோர சிவாசாரியரும்தான் சைவ மதத்தை நன்கு வளரச்செய்தார்கள்,

4. சாக்த மதம்

பராசக்தியை முழுமுதற் தெய்வமாகக் கருதி வழிபடும் மதம். திவ்விய தோற்றத்தில் அனுக்கிரகம், வீரபர்வனையில் ரௌத்திரமும் பசு பாவத்தில் ஞான நிலையும் கொண்டு உயிர்களை அனுக்கிரகம் செய்தபடியிருக்கிறாள். இவைகளை முறைப்படி திவ்வியாசாரம், வீராசாரம், சபாசாரம் என்று வகுத்து வழிபடும் தேவிபக்தன் திவ்வியாசாரத்தால் வீரியம் பெற்று பசுபாவனையால் ஞானம் பெறவேண்டும். இதில் வாமாசாரமென்றும் தக்ஷிணாசாரமென்றும் இரு பிரிவுகள் இருக்கின்றன. ஹிமாலயத்திலிருந்து இலங்கை வரையிலும் ஆப்கானிஸ்தான் முதல் பர்மாவரையில் 51 சக்தி பீடங்களுண்டு. சாக்த மதத்தின் வேதாந்த கிரந்தம், சக்திவிசிஷ்டாத்து வைதம் மற்றும் தேவி சூக்தம், ஸ்ரீ சூக்தம் தேவி பாகவ

தம், தேவி புராணம், காளிகா புராணம், தந்திர வித்தைகள் போன்ற அனேக கிரந்தங்கள் சாக்த மத சம்பந்தமானவைகளாகும்.

## 6. வைஷ்ணவமதம்

விஷ்ணுவை முழு முதல் கடவுளாகக் கொண்ட மதம். ஆதிகாலத்தில் பஞ்சராத்திர மென்றும் பிறகு பாகவத தர்மமென்றும் அறியப் பட்டது. வைஷ்ணவ மதம் பல பிரிவுகளை உடையது. முக்கியமான வைஷ்ணவ நூல்கள் பின்வருவன: நாரத பஞ்சாத்திரம், ஞானமிருத ஸாரம், நாரதபக்தி சூத்திரம், சாண்டில்ய பக்தி சூத்திரம், மஹாபாகவதம், விஷ்ணுபுராணம் ஹரி வம்சம், பத்தாம் நூற்றாண்டிலிருந்த யமுனாசாரியரல் ஸ்தாபிதமான வைஷ்ணவ மதம் அவருடைய சிஷ்யன் இராமானுஜரால் பிரசாரம் செய்யப்பட்டு வளர்ந்தது.

## கலைகள் 64

1. கீதம் 2. வாத்தியம் 3. நாட்டியம் 4. ஆலேக்கியம் 5. விசேஷகசேத்தியம் 6. தண்டுலம் 7. புஷ்பாஸ்தரணம் 8. தசநவஸனாண்டராகம் 9. மணிபூமிகா தருமம் 10. சயனரசன 11. உதகவாக்கியம் 12. உதகா காதம் 13. சித்திராசுவயோகம் 14. மார்லியக்ரதன விகல்பம் 15. சேகரகா பீடஜோஜன 16. நேபக்திவப்ரயோகம் 17. கரண்ணபத்திரபங்கம் 18. கெந்தயுக்தி 19. பூஷணயோஜன 20. இந்திரஜாலம்



21. கௌசுமாரயோகம் 22. ஹஸ்தலாகவம் 23. விசித்திரசாகயூஷபக்ஷியவிகாரக்கிரிய 24. பானகரஸராகாஸவயோஜன 25. ஸூசிவானகர்மம் 26. ஸூத்திரக்ரீட 27. வீணாடமருக வாத்தியம் 28. பிரஹேளிக 29. பிரதிமால 30. துர்வாசகயோகம் 31. புஸ்தக வாசனம் 32. நாடகாக்யிாயிகாதர்சனம் 33 காவியஸமஸியா பூரணம் 34. பட்டிகாவேத்ரவான விகல்ப்பம் 35. தக்ஷகர்மம் 36. தக்ஷணம் 37. வாஸ்துவித்யா 38. ரூப்பியரத்தனபரீக்ஷை 39. தாது வாதம் 40. மணிராகாரஞானம் 41. விருக்ஷாயிர்வேதயோகம் 42. மேஷகுக்குடலாவகயுத்தவிதி 43. ஸூகஸாரிகாப்ரலாபனம் 44. உஸ்ஸதனஸம்வாஹனம் (கேடீமர்த்தன கௌடீலம்) 45. அக்ஷரமுஷ்ட்டி காகதனம் 46. ம்லேச்சித விகல்ப்பம் 47. தேசபாஷா விஞ்ஞானம் 48. புஷ்படீகடிக 49. நிமித்தஞானம் 50. யந்திரமாதர்க 51. தாரண்யமாதர்க 52. ஸம்பாட்டியம் 53. மானஸீகாவ்யக்ரிய 54. அபிதானகோசம் 55. சந்தோஞானம் 56. க்ரியாகல்ப்பம் 57. சலிதயோகம் 58. வஸ்தரகோபனம் 59. தியூதவிசேஷம் 60. ஆகர்ஷணக்கிரீட 61. பாலக்ரீடாகரமம் 62. வைனாயிகிவித்தியாஞானம் 63. வைஜயிகி வித்தியஞானம் 64. வியாயாமிகி வித்யா ஞானம்.

## 64 கலைகளுக்குரிய தமிழ்ப் பெயர்கள்

1. அட்சர இலக்கணம் 2. இலிகிதம் 3. கணிதம் 4. வேதம் 5. புராணம் 6. வியாகரணம் 7. நீதி சாஸ்திரம் 8. சோதிட சாஸ்திரம் 9. தரும

சாஸ்திரம் 10. யோகசாஸ்திரம் 11. மந்திரசாஸ் திரம் 12. சகுனசாஸ்திரம் 13. சிற்ப சாஸ்திரம் 14. வைத்திய சாஸ்திரம் 15. உருவசாஸ்திரம் 16. இதிகாசம் 17. காவியம் 18. அலங்காரம் 19. மதுரபாடனம் 20. நாடகம் 21. நிருத்தம் 22. சத்தபிரமம் 23. வீணை 24. வேணு 25. மிருதங்கம் 26. தாளம் 27. அத்திரபரீக்ஷை 28. கனகபரீக்ஷை 29. இரதபரீக்ஷை 30. கஜபரீக்ஷை 31. அசுவபரீக்ஷை 32. இரத்தின பரீக்ஷை 33. பூபபரீக்ஷை 34. சங்கிராமஇலக்கணம் 35.மல்யுத்தம் 36. ஆகருஷணம் 37. உச்சாடனம் 38. வித்துவேஷணம் 39. மதனசாஸ்திரம் 40. மோகனம் 41. வசீகரணம் 42. இரசவாதம் 43. கந்தர்வவாதம் 44. பைபீலவாதம் 45. கௌத்துகவாதம் 46. தாதுவாதம் 47. காருடம் 48. நட்டம் 49. முட்டி 50. ஆகாயப்பிரவேசம் 51. ஆகாயகமனம் 52. பராகாயப்பிரவேசம் 53. அதிரிச்யம் 54. இந்திரஜாலம் 55. மகேந்திரஜாலம்56. அக்கினிஸ்தம்பம் 57. ஜலஸ்தம்பம் 58. வாயுத்தம்பம் 59. திட்டித்தம்பம் 60. வாக்குத்தம்பம் 61. சுக்கிலத்தம்பம் 62. கன்னத்தம்பம் 63. கயீகத்தம்பம் 64. அவத்தைப்பிரயோகம்.